OS: 198/2019

Date:10.08.2023

பெயர்  : சசிகுமார்

**வாதி தரப்பு சாட்சி 1 ஆஜர், சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

<u>**குறுக்கு விசாரணை:**</u>-  1, 2 பிரதிவாதிகள் தரப்பில்

எனது தந்தை என்ன வேலை செய்துவந்தார் என்றால் கூலிவேலைதான் செய்துவந்தார். எனது தாயாரும் கூலி வேலை தான் செய்து வந்தார். எனது சகோதரரர் 2 ம் பிரதிவாதி தர்மலிங்கம் என்ன வேலை செய்து வருகிறார் என்றால் மின்சார வாரியத்தில் பணிபுரிகிறார். அவர் எந்த ஆண்டு வேலைக்கு சேர்ந்தார் என்றால் 1997 ம் ஆண்டு வேலைக்கு சேர்ந்தார். நானும் மின்சார வாரியத்தில்தான் பணிபுரிகிறேன். நான் எந்த ஆண்டு பணியில் சேர்ந்தேன் என்றால் 2010 ம் ஆண்டு சேர்ந்தேன். மின்சார வாரியத்தில் 2010 ம் ஆண்டு பணிக்கு சேர்வதற்கு முன்பாக என்ன வேலை பார்த்துவேந்தேன் என்றால் மின்சார வாரியத்திலேயே ஒப்பந்த அடிப்படையில் 1999 ம் ஆண்டு முதல் வேலை செய்து வந்தேன். எத்தனை ஆண்டு காலம் நான் ஒப்பந்த தொழிலாளராக பணியில் இருந்து வந்தேன் என்றால் சுமார் 18 ஆண்டுகாலம் பணியில் இருந்து வந்தேன். ஒப்பந்த பணியில் இருந்தபோது எவ்வளவு சம்பளம் கொடுப்பார்கள் என்றால் சம்பளம் ரூ.300 கொடுப்பார்கள்.

எனது குடும்ப பூர்வீக சொத்துக்கள் யார் யாருக்கு பாத்தியம் என்றால் எனது தாத்தா சொத்து தாசன் மற்றும் ஒரு முனுசாமி இருவருக்கும் சொந்தமானது. எனது தாத்தாவின் பெயர் தாசன் ஆகும். எனது தாத்தாவின் தந்தை சோலைக்கு எத்தனை வாரிசுகள் என்றால் மூன்று ஆண்மக்கள், ஒரு பெண்மகள் அவர்கள் முறையே முனுசாமி, காளியப்பன், கணேசன் மற்றும்  ஆயாபொன்னு ஆவார்கள். எனது தந்தை பெயர் என்ன என்றால் கணேசன் ஆகும். கணேசன் யாருடைய மகன் என்றால் சோலையின் மகன். எனது தந்தை கணேசன் எப்போது காலமானார் என்றால் 1992 ல் காலமானார். எனது தந்தை 1992 ம் ஆண்டு காலமான பின்னிட்டு எங்களது குடும்பத்தினை எனது சகோதரர் 2 ம் பிரதிவாதி தர்மலிங்கம் முன்னின்று கவனித்துவந்தார் என்று சொன்னால் சரியல்ல.

யார் குடும்பத்தை கவனித்து காப்பாற்றி வந்தது என்றால் எனது தாய்தான் கூலி வேலை செய்து எங்களை காப்பாற்றினார். 1997 ம் ஆண்டு எனது சகோதரர் 2 ம் பிரதிவாதி வேலைக்கு சென்றுவிட்டார் என்று சொன்னால் சரிதான். 2 ம் பிரதிவாதி வேலைக்கு சென்ற

பின்பு குடும்பத்தை காப்பாற்றி வந்தார் என்று சொன்னால் அது தவறு. எனது சகோதரருக்கு எப்போது திருமணம் ஆனது என்றால் 2000 ம் ஆண்டில் திருமணம் ஆனது. 2 ம் பிரதிவாதிக்கு திருமணம் ஆகும் வரை அவர் பெறும் மாத சம்பளத்தினை எனது தாயிடம்தான் கொடுத்துவந்தார் என்றால் அது எனக்கு தெரியாது. அந்த சமயத்தில் நான் இளவராக இருந்தேன் என்றால் சரிதான். நான் அப்போது இளவராக இருந்த காரணத்தினால்தான் 2 ம் பிரதிவாதியான எனது சகோதரர் அவர் வேலைக்கு சென்று பெற்றுவந்த சம்பளத்தை எனது தாயாரிடம் அளித்து எங்கள் குடும்பத்தை காப்பாற்றி வந்த விவரம் எனக்கு தெரியவில்லை என்று சொன்னால் சரியல்ல.

எனது தாத்தா சோலையின் சொத்துக்களை எந்த ஆண்டு, எப்போது பாகம் செய்துகொண்டார்கள் என்றால் பாகம் செய்துகொள்ளவில்லை, வாய்மொழியாக தனித்தனியாக சொத்துக்களை ஓட்டிவந்தார்கள். எங்கள் குடும்பம் எனது தந்தை கணேசனுக்கு எவ்வளவு சொத்துக்கள் வந்தது என்றால் ½ ஏக்கர் நிலம் வந்தது. ½ ஏக்கர் நிலம் தற்போதும் வைத்துள்ளோமா என்றால் அதனை விற்பனை செய்துவிட்டோம். எந்த ஆண்டு சொத்தினை விற்பனை செய்யப்பட்டது என்றால் 23.02.2004 ம் தேதியில் விற்க்கப்பட்டது. எங்களது குடும்ப பாகத்திற்கு எவ்வளவு தொகை வந்தது என்றால் ரூ.2,00,000/- வந்தது. மேற்படி தொகை ரூ.2,00,000/- ம் எங்கள் குடும்பத்தில் யார் யாருக்கு சொந்தமானது என்றால் எனக்கும், எனது சகோதரர் 2 ம் பிரதிவாதிக்கும், எனது அக்காவிற்கும், எனது தாயாருக்கும் சொந்தமானது. அந்த பணத்தில் எனக்கு ரூ.50,000/- வந்தது என்றால் சரியல்ல, அந்த தொகை என்னிடம் கொடுக்கப்படவில்லை. யாரிடம் அந்த பணம் உள்ளது என்றால் எனது தாயாரிடம் உள்ளது. நான் 1999 ம் ஆண்டு முதல் ஒப்பந்த பணியாளராக தமிழ்நாடு மின்சார வாரியத்தில் பணிபுரிந்து வந்தபோது எனக்கு எத்தனை முறை அடிபட்டு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றேன் என்றால் ஒரு முறை அடிபட்டதில் சிகிச்சை எடுத்துகொண்டேன்.

எனது மருத்துவ சிகிச்சைக்கு எவ்வளவு செலவு ஆனது என்றால் ரூ.7,000/- செலவானது. இந்த செலவு தொகையினை யார் எனக்காக கொடுத்தார்கள் என்றால் என்னுடன் பணிபுரிந்த ஒயர்மேன் கொடுத்தார். நான் ஒரு முறை வேலையின்போது அடிபடவில்லை என்றும், பலமுறை வேலையின் போது எனக்கு அடிபட்டது என்றும் அப்போதெல்லாம் 2 ம் பிரதிவாதியும் எனது தாயாரும் தான் மருத்துவ சிகிச்சைகள் எனக்கு

பார்த்து வந்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. என்னுடன் பணிபுரிந்து வந்த ஒயர்மேன் எந்த செலவுகளும் எனக்காக செலவு செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. எனக்கு எப்போது திருமணம் நடந்தது என்றால் 2013 ம் ஆண்டு நடந்தது. திருமணத்திற்கு முன்பாகவே கூட்டு குடும்பமாக இருந்து வந்ததில் எனக்கு ஏற்படும் அனைத்து செலவுகளையும் 1, 2 பிரதிவாதிகள்தான் செய்து வந்தார்கள் என்றால் சரியல்ல. 2004 ம் ஆண்டே எங்கள் குடும்பத்திற்கு பிரிந்த சொத்தினை விற்பனை செய்ததில் வந்த தொகையான ரூ.2,00,000/- ல் எனக்கு சேரவேண்டிய ரூ.50,000/- ஐ தான் எனக்கு மருத்துவ சிகிச்சைக்காக செலவு செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல.

அவரவருக்கு பிரிந்த தொகை ரூ.50,000/- ல் எனது தாயாருக்கு பிரிந்த ரூ.50,000/- ல் அவர் தாவா 1 வது அயிட்ட சொத்தினை எனது தாயாரின் பாதுகாப்பிற்காக 03.06.2004 ம் ஆண்டு கிரயம் செய்துகொண்டார் என்று சொன்னால் சரிதான். ரூ.2,00,000/- எங்கள் குடும்பத்திற்கு சொத்தை விற்பனை செய்த வகையில் வந்த தொகையில் எங்கள் குடும்பத்தினர் ஒவ்வொருவருக்கும் தலா ரூ.50,000/- சொந்தம் என்றால் சரிதான். எனது தாயாருக்கு தனிப்பட்ட முறையில் ரூ.50,000/- பெற்றதில் அவர் பெயரில் தனியாக 1 வது அயிட்ட சொத்தினை கிரயம் பெற்றார் என்றால் அனைவருக்கும் பொதுவானதுதான் என சாட்சி தற்போது கூறுகிறார். ஆக 1 வது அயிட்ட சொத்தில் நான் பாகம் கேட்க எனக்கு எந்த உரிமையும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. 2 வது அயிட்ட சொத்தானது ஆதிதிராவிட நலத்துறையினரால் வழங்கப்பட்ட பட்டா என்றால் சரிதான். அந்த பட்டாவானது எனது தந்தை பெயரில் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். எனது தந்தை காலமானபின்பு மேற்படி பட்டாவானது எனது தாயார் பெயருக்கு வந்தது என்றால் சரியல்ல. நாளது தேதிவரை எனது தந்தை பெயரில்தான் இருந்து வருகிறது.

2 வது அயிட்ட சொத்தை பொருத்து எங்கள் நால்வருக்கும் பாகம் உள்ளது என்றால் சரிதான். 2 வது அயிட்ட சொத்தில் மட்டும்தான் நான் ¼ பாகம் கேட்கமுடியும் என்று சொன்னால் 2 வது அயிட்ட சொத்தில் பாகம் உள்ளது. எனக்கு தாவா 1 வது அயிட்ட சொத்தில் பாகம் கேட்க எவ்வித உரிமையும் இல்லை என்றும், 2 வது அயிட்ட சொத்தில் மட்டுமே பாகம் உள்ளது என்று சொன்னால் சரியல்ல, இரண்டு அயிட்ட சொத்துக்களிலுமே எனக்கு பாகம் உள்ளது. நான் எனது தாயாரை கவனிப்பது இல்லை என் தாயார் அவருக்கு பிரிந்த பணத்தை கொண்டு அவர் தனிப்பட்ட முறையில் அவரது பெயருக்கு கிரயம்

பெற்றுள்ள 1 வது அயிட்ட சொத்தினை அவரது பேரன்களும், 2 வம் பிரதிவாதியின் மகன்களுக்கு ஒரு உயில் ஆவணம் ஏற்படுத்தியுள்ளார் என்று சொன்னால் அதற்குதான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். எந்த ஆண்டு உயில் எழுதிவைத்தார் என்றால் அது எனக்கு தெரியாது. எப்போது அந்த உயில் குறித்து எனக்கு தெரியும் என்றால் 2018 ம் ஆண்டு தெரியும். உயில் எழுதியது தவறு என்றுதான் வழக்கு போட்டுள்ளேனா என்றால் எனக்கு சொத்தில் பாகம் வேண்டிதான் வழக்கு போட்டுள்ளேன்.

நான் தாக்கல் செய்துள்ள வழக்கில் மேற்படி உயில் செல்லாது என எந்த பரிகாரமும் தாவாவில் கேட்கவில்லை என்று சொன்னால் சரியல்ல, கேட்டுள்ளேன். இன்றைய தேதி வரை எனது தாயாரான 1 ம் பிரதிவாதியை 2 ம் பிரதிவாதி குடும்பத்தினர்தான் பாதுகாத்து, பராமரித்து காப்பாற்றி வருகிறார்கள் என்று சொன்னால் சரியல்ல. நான் எனது தாயாருக்க எவ்வித உதவியும் செய்யவில்லை என்பதால் தான் என் தாயார் தன்னை காப்பாற்றி வருகின்ற 2 ம் பிரதிவாதியின் குழந்தைகளுக்கு உயில் சாசனம் எழுதி பதிவு செய்துகொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. நான் பொய்யான ஆவணங்கள் அடிப்படையில் பாகம் கேட்டு இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளதால் இவ்வழக்கு நிலைக்கதக்கதல்ல இந்த தாவா செலவுத் தொகையுடன் தள்ளுபடியாகவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u>:- இல்லை.

ஒப்பம்/-PW1
ஒப்பம்/- சார்பு நீதிபதி, ஓமலூர்.